# இறைத்தூதன்

## கத்தோலிக்க வார இதழ்


இயேசு, “மனம் மாறுங்கள், ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது” எனப் பறைசாற்றத் தொடங்கினார். இயேசு கலிலேயக் கடலோரமாய் நடக்கும்போது, சகோதரர் இருவரைக் கண்டார். ஒருவர் பேதுரு எனப்படும் சீமோன், மற்றவர் அவர் சகோதரரான அந்திரேயா. மீனவரான அவ்விருவரும் கடலில் வலை வீசிக் கொண்டிருந்தனர். இயேசு அவர்களைப் பார்த்து, “என் பின்னே வாருங்கள்; நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்” என்றார். உடனே அவர்கள் வலைகளை விட்டுவிட்டு அவரைப் பின்பற்றினார்கள். (மத் 4:17-20)






# இறைவாக்கு ஞாயிறுக்கான செய்தி

## “ஆயர் கூட்டொருங்கியக்க மாமன்றமும் இறை வார்த்தையும்”

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரி களே,

“இறைவனுக்கும் அவருடைய மக்களுக்கும் இடையிலான நிலையான உரையாடலில் அடங்கியுள்ள வற்றாத வளங்களைப் பாராட்டும் பொருட்டு, இறைவனுடைய வார்த்தைக்கு ஓர் ஞாயிற்றுக்கிழமையை முழுமையாக ஒதுக்க வேண்டும்” என்ற ஒரே நோக்கத்துடன் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு திருத்தந்தை பிரான்சிஸ் இத்தினத்தைத் துவக்கி வைத்தார். அதனை முன்னிட்டு கடவுளின் வார்த்தை வழியாக இந்த ஞாயிற்றுக்கிழமையில் உங்களை வாழ்த்தி உரையாற்ற வட்டார விவிலிய ஆணையம் விரும்புகிறது."

இன்று திருஅவையைச் சூழ்ந்துள்ள பிரச்சனைகளை அறிந்த திருத்தந்தை, திருஅவையின் ஆரம்ப பழக்கவழக்க வழிமுறைகளுக்குத் திரும்புவதற்கான ஈராண்டு செயல்முறை திட்டத்தை, அதாவது 'சினோடலிட்டி' எனப்படும் ஆயர் கூட்டொருக்கியக்க 'ஒன்றாக பயணித்தல்' என்று பொருள்படும் திட்டத்தைத் தொடங்கினார். முறைகேடுகள், அதிருப்தி மற்றும் நம்பிக்கையாளர்களின் ஈடுபாடு அற்ற சூழல் திருஅவையில் நிலவும் போது, 'ஒன்றாகப் பயணித்தல்' என்ற இந்த செயல்முறையானது, நம்பிக்கை மற்றும் மகிழ்ச்சியின் பிரகாசமான எதிர்காலத்திற்கு கடவுளின் மக்களாகிய முழு திருஅவையையும் தட்டி எழுப்பும் கடமையைக் கொண்டிருக்கிறது.

திருவிவிலியமானது கடவுள், அலைந்து திரிந்த அவரது மக்களான எபிரேயர் எகிப்துக்குக் குடிபெயர்ந்தது (இச 26:5-10) தொடங்கி, விடுதலை பயணம் மற்றும் எம்மாவுசுக்குப் பயணித்த சீடர்கள் (லூக் 24:13f) போன்றவற்றோடு, மத்திய தரைக்கடல் பகுதிகளோடு, சிறிய ஆசியா வரை பயணித்த திருத்தூதுவர்கள் வரையிலானவர்களின் பயணத்தைச் சித்தரிக்கிறது. "வழியைப் பின்பற்றுபவர்கள்" (திப 9:2) என்று அழைக்கப்பட்டவர்களான தொடக்கத் திருஅவையினர், மேற்கூறிய இந்த பயண அனுபவத்தை அறிந்திருந்தப்படியால் எருசலேம் சங்கத்தில், குறிப்பாக கிறிஸ்தவத்தை ஏற்க, மதம் மாறிய யூதர்கள் அல்லாதவர்களுக்காக முக்கியமான முடிவுகளை எடுப்பதில் பெரும்பங்காற்றியது (அப். 15). இந்த ஆயர் கூட்டொருங்கியக்க மாமன்றமானது ஒன்றாகப் பயணம் செய்வதில், சீடர்களின், குறிப்பாக பேதுரு மற்றும் பவுல் ஆகியோரின் அனுபவங்களைக் கேட்பதால், முழு திருஅவையாக, ஒரு தீர்க்கமான முடிவை எடுப்பதற்கு மிகவும் உதவி வருகிறது

எனவே, இந்த ஆயர் கூட்டொருங்கியக்க மாமன்றம் செவிமடுத்தல் மற்றும் உரையாடும் பண்பாட்டை வரவேற்கிறது. ஒருவருக்கொருவர் செவிமடுத்தல் மற்றும் கடவுளின் வார்த்தையைக் கேட்பதன்வழி, தூய ஆவியானவர் திருஅவைக்கு என்ன சொல்கிறார் என்பதை அறிய இறைமக்களுக்கு உதவியாக உள்ளது. "தூய ஆவியானவர், ஆண்டவருடைய வாக்குறுதியின்படி, இயேசுவின் நற்செய்தியின் தொடர்ச்சியை உறுதிப்படுத்துவதில் தன்னை குறைத்துக் கொள்ளா வகையில், அவருடைய வெளிப்பாட்டின் புதிய ஆழங்களை ஒளிரச் செய்து, திருஅவையின் பயணத்தைத் தக்கவைக்கத் தேவையான முடிவுகளை எடுக்க ஊக்குவிக்கிறார்." (ஆயர் கூட்டொருங்கியக்க ஆயத்த ஆவணம் 16) இந்த செயல்முறை இறுதியில் ஒற்றுமை, பங்கேற்பு மற்றும் தூதுரைப்பணி ஆகியவற்றில் ஒரு மாற்றத்தை நோக்கி நம்மை பயணிக்க வைக்கிறது.

எனவே, முதற்கட்டமாக, திருப்பலிக் கொண்டாட்டத்தின் போது இறைவார்த்தை வாசிக்கப்பட்டு, மறையுரையைக் கேட்டு, நற்கருணை திருவிருந்தில் தகுதியான மற்றும் பயனுள்ளவகையில் பங்கேற்பதற்காக, திருப்பலிக்கு முன்பாக வாசகங்களை முறையாக வாசித்து உங்களைத் தயாரிக்குமாறு உங்கள் ஒவ்வொருவரையும் நான் ஊக்குவிக்கிறேன். இறை வார்த்தை-பகிர்வு குழுக்களில் சேரவும், பங்கேற்கவும் முயற்சி செய்யுங்கள். இது கடவுளின் வார்த்தையை ஆவியின் தூண்டுதலால் வாள்போல் ஊடுருவி நமது எண்ணங்கள் மற்றும் உணர்ச்சிகள் மூலங்களை துளைத்து, இதயம் மற்றும் மனதை ஒரு சமய நல்லிணக்கத்திற்கான மாற்றத்தைக் கொண்டுவர உதவுகிறது. இந்த இறை வார்த்தையின் ஞாயிற்றுக்கான செய்தியான "கனவுகளை விதைக்கவும், முன்னறிவிக்கப்பட்ட வாக்கு நிறைவேறவும் மற்றும் தூரநோக்கு சிந்தனைகளை முன்வைக்கவும், நம்பிக்கை செழிக்க அனுமதிக்கவும், நம்பிக்கையை ஊக்குவிக்கவும், மனக்காயங்களை ஆற்றவும், உறவுகளை பிணைக்கவும், நம்பிக்கையின் விடியலை எழுப்பவும்" திருஅவையை ஆயர் கூட்டொருங்கியக்க மாமன்ற பேரவை வழியில் இயக்குவதாக அமையட்டும் .


Rt. Rev. Bishop Richard Ng

தலைவர், வட்டார திருஅவை விவிலிய ஆணையம்

மலேசியா, சிங்கப்பூர் மற்றும் புருணை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை.





# மறைக்கல்வி ஞாயிறு தின செய்தி

## கருப்பொருள்

## ‘நம்பிக்கைக் கொண்ட குடும்பங்களுடன் திருஅவையை புதுப்பித்தல்’

தொடக்கத் திருஅவையில் மிகவும் ஆக்கப்பூர்வமாக செயல்பட்ட ஸ்தேவான் குடும்பத்திற்கான பவுல் அடிகளின் பிரியாவிடை செய்தியானது, இன்றைய நவீன குடும்பங்களின் புதுப்பித்தலுக்கு அடிப்படையாக உள்ளது. அவர் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்தில் *விழிப்பாயிருங்கள்; நம்பிக்கையில் நிலைத்திருங்கள்; துணிவுடன் நடந்துக்கொள்ளுங்கள்; வலிமையுடன் செயல்படுங்கள்'. அனைத்தையும் அன்போடு செய்யுங்கள் (1கொரி.16;13-14)'* என்று வலியுறுத்தினார். இக்குடும்பத்தார் அன்பின் அடிப்படையில் பிறர் பணி செய்வதில் தங்களை முழுமையாக அர்ப்பணித்தனர் என்றார். "இறைமக்களுக்கான பணி" என்ற கொள்கையின் மூலம் நம் குடும்பங்களை மீண்டும் உயிர்ப்பிக்க முடியும். "இறைமக்களுக்கான பணி" இறைவார்த்தையின் அன்பை எடுத்துக்காட்டுவதை, ஒருவர் மற்றவருக்கு பணியாற்றும்போது சிறந்ததைத் தேடுவார் ஸ்தேவான் குடும்பமும் அவ்வாரே செய்தது. ஆண்டவருடைய ஆவியால் நிரப்பப்பட்டு, அவர்கள் கொரிந்து சபையின் தலைமைக்கு அடிபணிந்தனர் (எபே. 5:18-21), ஒன்றாக உழைத்து, ஆண்டவருக்காக தங்கள் பணியில் கடினமான பணிகளைச்

*தொடர்ச்சி அடுத்த பக்கம்...*



# மறைக்கல்வி ஞாயிறு தின செய்தி
## *(முதல் பக்கத் தொடர்ச்சி)*

செய்தார்கள். திருஅவையில் சேவை செய்வதில் தங்கள் வாழ்க்கையை செலுத்துவதோடு, ஸ்தேவானும் அவரது குடும்பத்தினரும் ஒன்றாக இறைவேண்டல் செய்தனர். *"சேர்ந்து இறைவேண்டல் செய்யும் குடும்பம் சேர்ந்து வாழும்.*

நிச்சயமாக, கடவுள் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட ஒரு குடும்பத்தின் சிறப்பு, ஒரு சமூகத்தின் அடிப்படையிலும் உயிரோட்டம் கொடுக்க முடியாமல் இருக்க முடியாது. இருப்பினும், இன்று நவீன குடும்பங்கள் எதிர்கொள்ளும் மன அழுத்தங்கள், சவால்கள் மற்றும் உண்மையான சூழ் நிலைகள் குடும்பங்களை வேண்டுமென்றே இறை நம்பிக்கையில் தளர்வடைய செய்கின்றன. சமூக மற்றும் கலாச்சார போக்குகள் தனித்துவம், நாத்திகம், பன்மைத்துவம், தனிப்பட்ட விருப்பு வெறுப்பு மற்றும் உடனடி திருப்தி ஆகியவற்றை கூறலாம். அனைத்தும் இக்காலத்தில் கிறிஸ்தவ குடும்பத்திற்கு சவால் விடுகின்றன.

நமது சமயக கல்வித் திட்டங்கள் யாவும் புதுநன்மைக்கு தயாரிப்பு செய்யும் இளைஞர்களுக்கு ஏற்றவாறு தயாரிக்கப்பட்டுள்ளன. ஆனால் அடுத்தடுத்த ஆண்டுகளில் இவ்விளைஞர்களின் எண்ணிக்கை பெரும்பாலும் வியத்தகு அளவில் குறைகிறது. அவர்கள் ஏன் திரும்பி வருவதில்லை? உறுதி பூசுதலுக்கு தயாரிப்பு செய்து அதைப் பெற்ற பிறகு, பலர் வேறு வகை நாட்டங்களில் மையம் கொள்கின்றனர். *திரு அவையில், ஏன் சிலர் மட்டுமே பணிக்குழுக்களில் அல்லது இளைஞர் குழுக்களில் ஆர்வத்தோடு ஈடுபடுகிறார்கள்?*

ஒருவேளை, மறைக்கல்வி வகுப்புகள், இறை நம்பிக்கையை உருவாக்கும் பயிற்சிகள், இளைஞர் நிகழ்ச்சிகள், விவிலிய முகாம்கள், இளைஞர்களுக்கான பேரணிகள் மற்றும் பல நல்ல அர்த்தமுள்ள நிகழ்ச்சிகள் சிறப்பு உள்ளது என்று நாம் எண்ணிக்கொண்டிருக்கலாம் ஆனால், இதற்கு மாறாக, குடும்பங்களில், குறிப்பாக பெற்றோர் மத்தியில் அவர்களின் குழந்தைகள் மற்றும் இளம் வயதினரை மறைக்கல்வி வகுப்பில் விட்டுச் சென்றால் மட்டும் போதும். மறைக்கல்வி ஆசிரியர்கள் அவர்களை சீடர்களாக உருவாக்கிவிடுவார்கள் என்ற எண்ணதை நாமே அவர்கள் மனதில் விதைத்திருக்கக்கூடும்.

ஆனால், அவர்களை சீடர்களாக உருவாக்குவோம் என்று எடுத்த நம்முடைய முயற்சிகள் எதிர்பார்த்ததை விட நேர்மறையான முடிவுகளைத் தந்ததால், குடும்பங்களும் பெற்றோரும் தங்கள் பங்கைச் செய்யவில்லை என்று நாம் முடிவு செய்கிறோம். அவர்கள் தங்கள் குழந்தைகளின் நம்பிக்கையின் முதன்மை மறைக்கல்வி ஆசிரியர்கள் என்பதை அவர்களுக்கு மீண்டும் மீண்டும் நினைவூட்ட வேண்டும். அவர்கள் ஏன் அவர்களின் பொறுப்பை நிறைவேற்றவில்லை ? ஒருவேளை, அவர்களின் முன்னுரிமைகளில் அவர்கள் குழம்பிவிட்டார்களா? அல்லது பெற்றோர்களில் இத்தகைய கவனக்குறைவுக்கு நாம் தான் காரணமா?

இந்த பிரச்சனை நீண்ட காலமாக நிலவுகிறது. நாம்தான் எல்லாக் குடும்பங்களுக்கும் சமய நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் முயற்சிகளில் ஆதரவாக உதவிகரம் நீட்ட வேண்டும். குடும்ப உறுப்பினர்கள் மத்தியில் நம்பிக்கையை ஊக்குவிக்க தேவையான உறுதிப்பாட்டை நாம் தான் வழங்க வேண்டும். குடும்ப நம்பிக்கை வளர்ச்சி என்பது விருப்பத்திற்கு உட்பட்டதல்ல. அது இயல்பாக நடைபெற வேண்டியதொன்றாகும்.

முடிவாக, திரு அவையில் புதுப்பித்தல் என்பது கடவுளின் செயலாகும். இருப்பினும், அவர் அதை நம் மூலம் செயல்படுத்துகிறார். வாய்ப்பும் சவாலும் நமக்குரியது. நாம் விழிப்புடன் இருக்க வேண்டும், இறை நம்பிக்கையில் உறுதியாக நிற்க வேண்டும், துணிவுடன் இருக்க வேண்டும், ஆற்றலோடு செயல்பட வேண்டும், (1 கொரி 16:13-14) நம்பிக்கை மற்றும் தொண்டு ஆகியவற்றை நிலை நிறுத்த வேண்டும் – அன்பே குடும்பங்கள் கட்டியெழுப்பபடும் அடித்தள பாறையாகும்.

இறுதியாக, "மக்கள் தொடர்பில் மட்டுமல்ல, ஒற்றுமையிலும், இயேசு கிறிஸ்துவுடன் நெருங்கிய உறவிலும் ஈடுபடுவதன் மூலம் திருஅவையைப் புதுப்பித்தல்" என்ற உறுதியான நோக்கத்தை நடைமுறைக்கு கொண்டு வருதல் வேண்டும். இயேசு கிறிஸ்துவால் மட்டுமே தந்தையின் அன்பின் ஆவியிலும், தூய ஆவியாரின் வாழ்விலும் நம்மை வழிநடத்த இயலும் (Catechesi Tradendae 5)

# சிரம்பான், மினவுதல் அன்னை பங்கில் 2023 ஆண்டுக்கான செயல்திட்டம் வரையப்பட்டது

கடந்த 8 சனவரி 2023 அன்று, சிரம்பான் மினவுதல் மாதா பங்கின் பங்கு மேய்ப்புப்பணி கூட்டம் பிற்பகல் 3.00 மணி முதல் மாலை 6.45 மணி வரை



சிறப்பாக நடந்தேறியது. இக்கூட்டத்திற்கு நமது கோலாலம்பூர் மறைமாவட்ட பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள் சிறப்பு வருகை தந்தார்.

தமிழ், ஆங்கிலம், சீனம் மற்றும் மலாய் மொழி பேசும் பங்கு நிர்வாக குழு, அதிச பொறுப்பாளர்கள், பணிக்குழு பொறுப்பாளர்கள் மற்றும் பங்கு இறைமக்கள் ஆகிய ஏறக்குறைய 160 பேர் கலந்து கொண்டார்கள்.

தொடக்கத்தில், பேராயர், பங்குத்தந்தை மற்றும் துணை தந்தையர் தொடக்க இறைவேண்டலுடன் நிகழ்வை இனிதாகத் தொடக்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் பங்கின் நடவடிக்கை ஆய்வு நாளன்று (Parish study day) அடையாளம் காணப்பட்ட விடயங்கள் பகிரப்பட்டன. இந்த விடயங்களானது நான்கு பிரிவுகளாக வகுக்கப்பட்டிருந்தன. அவை:

1) இளையோர் 2) சமூகம் 3) குடும்பம் 4) திருஅவை

மேலும் மேலே அடையாளம் காணப்பட்ட விடயங்களை ஆய்வு செய்ய மொழி வாரியாக குழுக்கள் பிரிக்கப்பட்டன. இந்த குழுக்கள் மேற்கண்ட நான்கு பிரிவுகளுக்குள் அடங்கிருந்த குறைபாடுகளையும் அவற்றின் தீர்வுக்கான வழிமுறைகள் பற்றி கலந்துரையாடினர்.

தேநீர் விருந்திற்குப் பின்னர், திரட்டப்பட்ட நான்கு மொழி குழுவின் கருத்துக்களையொட்டி பேராயர் அவரது கருத்துக்களை பகிரந்துகொண்டார்.



*பிறந்தநாள் அணிச்சல் முன் அருள்பணியாளர்களும் பேராயரும்*

நிகழ்வின் இறுதிபகுதியில் பங்கு பெற்ற அனைவருக்கும் பங்கு குருவானவர் நன்றி தெரிவித்தார். நிறைவாக, பேராயர் பிறந்த நாளை முன்னிட்டு அவருக்காக பிறந்தநாள் அணிச்சல் ஒன்று வெட்டப்பட்டது.

இறுதியாய் பேராயரின் ஆசீரோடு பங்கு மேய்ப்புபணிக்கூட்டம் இனிதாய் முடிவுற்றது.

# அழைக்கும் இறைவன் குரல் கேட்போம்!

இன்று ஆண்டின் பொதுக்காலத்தின் மூன்றாம் ஞாயிறுவில் இணைந்துள்ளோம். இன்றைய நாள் ‘இறைவாக்கு ஞாயிறு’ என்றும் அழைக்கப்படுகிறது. காரிருளில் நடந்து வந்த மக்களை பேரொளியில் வழிநடத்திய இறைவனின் நற்செய்தியை நம்பிக்கையோடு அறிக்கையிட பொதுக் காலம் மூன்றாம் ஞாயிறு நம்மை அழைக்கின்றது. இன்றைய முதல் வாசகத்தில் சுமையாக இருந்த நுகத்தை உடைத்தெறிந்தீர் என்று ஆசீர்வாதமான வார்த்தைகளை வழங்குகிறார் எசாயா இறைவாக்கினர்.

அதே வேளையில், இரண்டாம் வாசகத்தில், மனித ஞானத்தின் அடிப்படையிலான சொற்களில் நற்செய்தியை அறிவித்தல் ஆகாது. அவ்வாறு அறிவித்தால் கிறிஸ்துவின் சிலுவை பொருளற்றுப் போய்விடும் என்று நம்மவருக்கு பவுல் அடிகள் கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்தின் வாயிலாக எச்சரிக்கைவிடுக்கிறார்.

இன்றைய நற்செய்தியிலோ, உலகின் ஒளியான இயேசு (யோவா 8:12), திருமுழுக்கு யோவான் தன்னுடைய பணியிலிருந்து விலகியபின்பு அல்லது ஓய்ந்த பின்பு, அங்கிருந்து தன்னுடைய இறையாட்சிப் பணியைத் தொடங்குகின்றார். காரிருளில் இருந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடரொளி உதித்துள்ளது. இந்த பேரொளிக்கு வாருங்கள் என் கலிலேயக் கடலில் மீன் பிடிக்கும் தொழில் செய்துக்கொண்டிருந்த பேதுரு, அந்திரேயா, யோவான், யாக்கோபு இவர்களைத் தமது முதல் சீடர்களாக இறைப்பணியைச் செய்யவும் அவரின் தொடர் பணிக்குத் துணையாயிருந்து செயல்படியவும் அழைப்பு விடுக்கிறார்.

முதலில் “மனம் மாறுங்கள்” என்றவர் “என் பின்னே வாருங்கள்” என இந்த மீனவர்களிடம் சொல்கிறார். தங்களின் மீன் பிடிக்கும் தொழில் என்று குறுகிய வட்டத்திற்குள் வாழ்ந்த அவர்களைப் பரந்து விரிந்த உலகில் வாழும் மக்களுக்குப் பணி செய்ய அழைக்கிறார். இறைவனின் சாயலில் படைக்கப்பட்ட நாம் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட பணிக்காக அழைக்கப்படுகிறோம்.

இன்று நாம் கருத்தில் கொள்ளவேண்டிய ஒரு முக்கியமான செய்தி, ‘இறையாட்சிப் பணி ஒருகூட்டு முயற்சி’ என்பதைத்தான். ஆம். ஆண்டவர் தொடங்கி, விட்டுச் சென்ற இறையாட்சிப் பணி தொடர்ந்து நடைபெற ஒவ்வொருவரும் தன்னுடைய பங்களிப்பைச் செய்யவேண்டும். இதில் எந்தவொரு மாற்றுக் கருத்தும் கிடையாது.

இறைவனின் அழைப்பு இந்த உலகத்தில் இருக்கக்கூடிய எல்லாவற்றையும் விட மேலானது, நாமும் இயேசுவினால் ஈர்க்கப் பெற்று, அவரது அழைப்பைப் புரிந்து கொண்டு, செயல்படும் போது, அவர் நிச்சயம் தன்னுடைய அருளால், ஆசீரால் நிரப்புவார், தூய ஆவியால் நம்மைத் திடப்படுத்துவார் என நம்பிக்கையுடன் இயேசுவின் அழைப்பிற்குச் சரியென பதிலுரைத்து மறைப்பணியைச் செய்திட பின் தொடர வேண்டும்.

ஒவ்வோர் ஆண்டும், பொதுக்காலத்தின், மூன்றாம் ஞாயிறை, இறைவாக்கு ஞாயிறு என்று கொண்டாடுவதற்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார். இன்று இறைவாக்கு ஞாயிறு. "இறை வார்த்தை ஞாயிறு", கடவுள் மற்றும், அவரது வார்த்தை மீது ஆழ்ந்த நம்பிக்கையை வெளிப்படுத்தி, அன்பு செலுத்தி, பிரமாணிக்கத்துடன் சாட்சி பகர நமக்கு அழைப்பு விடுக்கின்றது. இறை வார்த்தையை வாழ்வாக்கிய அன்னை மரியின் அடிச் சுவடில் நாமும் நடந்து இறை சாட்சிகளாய் வாழ்வோம்.

*சவரிநாதன், சுங்கை பட்டாணி*

### ஆண்டின் பொதுக்காலம் 3-ம் ஞாயிறு

| | |
|---|---|
| 1-ம் வாசகம் | எ.சா 9:1-4 |
| தி. பாடல்: | 27: 1. 4. 13-14 2ம் |
| வாசகம்: | 1 கொரி 1: 10-13,17 |
| நற்செய்தி: | மத் 4: 12-23 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**

**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**

**திருப்புகழ் மாலை- வாரம் 3**